அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


**அ.எண்:** 57 /2017

**தேதி:** 08.05.2017

**தீ விபத்தில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு ஒரே குடும்பத்தில்**
**இரண்டு குழந்தைகள் உள்பட 4 பேர் உயிரிழந்த பரிதாபம்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.**

வடபழனி தெற்கு பெருமாள் கோயில் தெருவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் இருசக்கர வாகனங்கள் எரிந்ததால் புகைமூட்டம் ஏற்பட்டு தூங்கி கொண்டிருந்தவர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. மூச்சுத்திணறலால் ஒரே குடும்பத்தில் இரண்டு குழந்தைகள் உள்பட 4 பேர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் படுகாயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், படுகாயமடைந்தவர்களுக்கும் அரசு தகுந்த நிவாரணம் வழங்கவேண்டும்.

மேலும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை செய்துகொள்வதோடு மட்டுமல்லாமல், பாதுகாப்பு உபகரணங்கள், எச்சரிக்கை கருவிகளையும் பொறுத்த வேண்டும். இதன் மூலம் விபத்துக்களை உடனடியாக தவிர்க்கலாம்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்



**ஆர் சரத்குமார்**
நிறுவனர் - தலைவர்


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com